**செய்தி வெளியீடு எண் : 268** **நாள்: 24.02.2022**

**<u>செய்தி வெளியீடு</u>**

**உக்ரைனில் சிக்கித் தவிக்கும் தமிழ்நாட்டைச் சார்ந்த மாணவர்கள் மற்றும் புலம் பெயர்ந்தவர்களின் குடும்பத்தினர் உதவிக்காக தொடர்பு அலுவலர்களின் எண்கள் – தமிழ்நாடு அரசு அறிவிப்பு**

ரஷ்ய இராணுவம் இன்று (24.2.2022) அதிகாலை உக்ரைன் நாட்டுக்குள் இராணுவ நடவடிக்கைகளுக்காக சென்றுள்ளதாக ஊடகச் செய்திகளின் வாயிலாக அறியப்பட்டுள்ளது. இதன் காரணமாக, தமிழ்நாட்டைச் சேர்ந்த சுமார் 5,000 மாணவர்கள், பெரும்பாலும் தொழில்முறை கல்வி படிப்போர் மற்றும் தமிழ்நாட்டிலிருந்து புலம் பெயர்ந்தவர்கள் உக்ரைனில் சிக்கித் தவிக்கின்றனர்.

தமிழ்நாட்டில் இருக்கும் அவர்களின் குடும்ப உறுப்பினர்கள் வாயிலாக பல மீட்பு அழைப்புகள் வந்தவண்ணம் உள்ளன. இதனை ஒருங்கிணைக்கும் பொருட்டு **திருமதி ஜெசிந்தா லாசரஸ், இ.ஆ.ப.,** ஆணையர், அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வு ஆணையரகம், அவர்கள் மாநில தொடர்பு அலுவலராக நியமனம் செய்யப்பட்டுள்ளார். மேலும், ஒவ்வொரு மாவட்டத்திலும், **மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது)** அவர்களையும், புதுதில்லியில் உள்ள தமிழ்நாடு இல்லத்தின் **கூடுதல் தலைமைச் செயலாளர்/தலைமை உள்ளுறை ஆணையர் மற்றும் உள்ளுறை ஆணையர்** அவர்களை தொடர்பு அலுவலராகவும் நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள்.

உக்ரைனில் சிக்கித் தவிக்கும் தமிழ்நாட்டைச் சார்ந்த மாணவர்கள் மற்றும் புலம் பெயர்ந்தவர்களின் குடும்பத்தினர் உதவிக்கு அருகில் உள்ள தொடர்பு அலுவலர்களை தொடர்பு கொண்டு அவர்களின் விபரத்தை தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**<u>தொடர்பு அலுவலர்களின் எண்கள்</u>**

| | |
|---|---|
| மாநில அவசர கட்டுப்பாட்டு மையம் கட்டணமில்லா தொலைபேசி எண் | 1070 |
| **திருமதி ஜெசிந்தா லாசரஸ், இ.ஆ.ப.,**<br>ஆணையர்,<br>அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வு ஆணையரகம் | 9445869848<br>9600023645<br>9940256444<br>044 - 28515288 |
| உக்ரைன் அவசர உதவி மையம்<br>தமிழ்நாடு பொதிகை இல்லம்,<br>புதுதில்லி. | வாட்ஸ்அப் எண்<br>9289516716<br>மின்னஞ்சல் –<br>ukrainetamils@gmail.com |

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**